10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 | அதிர்வு 84 | செவ்வாய்க்கிழமை ஓகஸ்ட் 08 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48

## கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று

கட்சித் தலைவர்களின் விசேட கூட்டமொன்று இன்று மாலை நடைபெறவுள்ளது. தீர்மானம் மிக்க சில விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி முடிவெடுக்கும் நோக்கில் இந்தக் கூட்டம் நாடாளுமன்ற வளாகத்தில் நடத்தப்படவுள்ளது. சபாநாயகர் கரு ஜயசூரியவின் பணிப்புரைக்கு அமைய இந்தக் கட்சித் தலைவர்கள் மகாநாடு கூட்டப்பட்

06



## நல்லூரில் சுட்டவர் அடையாளம் காணப்பட்டார்

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். யாழ். நீதவான் நீதிமன்றில் நீதவான் எஸ். சதீஸ்கரன் முன்னிலையில் இன்று இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின் போது சந்தேகநபர் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். நீதிபதி இளஞ்செழியனின் கார் சாரதி, சக பொலிஸ் பாதுகாவலர் மற்றும் சந்தேகநபர் பறித்து சென்றதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் ஆகியோர் சந்தேகநபரை அடையாளம் காட்டியுள்ளனர்.(எ)

## பொலிஸ் வேட்டையில் இதுவரை 100 பேர் கைது

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டையின் போது இதுவரை 100 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 4ஆம் திகதி முதல் நேற்று வரையில் இந்த தேடுதல் நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர்களும் உள்ளடங்குகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அடையாளத்தை உறுதி செய்யாத 31 மோட்டார் சைக்கிள்களும்,

06

## மாகாண சபையில் குழப்பம்: நிகழ்ச்சி நிரலை தீயிட்டுக் கொளுத்தினர்



வட மத்திய மாகாண சபையில் இன்று அமர்வு நடைபெற்றது. இதன்போது சபையின் நிகழ்ச்சிநிரலை தீயிட்டு கொளுத்தி ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்ததோடு, கூச்சல் குழப்பத்திலும் ஈடுபட்டனர். வட மத்திய மாகாண சபையின் புதிய தலைவர் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் குழப்பத்தில் ஈடுபட்டதாக தெரியவருகின்றது. (எ)



# பறிபோகின்றது ரவியின் பதவி!

கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்றைய தினம் இடம்பெறவுள்ள நிலையில், வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தற்காலிக அடிப்படையில் பதவி விலகுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்றைய கட்சி தலைவர்களின் கூட்டத்தின்போது ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் சமர்ப்பிக்கப்படும் என முடிவெடுக்கப்படும் பட்சத்தில், ரவி கருணாநாயக்க தற்காலிக அடிப்படையில் பதவி விலகுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி, மத்திய வங்கியில் இடம்பெற்றதாக கூறப்படும் பிணை முறி மோசடி தொடர்பிலான விசாரணைகள் நிறைவு பெறும் வரையில் அவர் பதவி விலகுவார் என

06

## பதற்றம் தணிவு

தொடர் சுற்றிவளைப்புக்களாலும், கைதுகளாலும் யாழ். துன்னாலையில் கடந்த சில நாட்களாக நீடித்து வந்த பதற்றமான சூழ்நிலை இன்றைய தினம் சற்றுத் தணிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர் கைதுகளால் துன்னாலைப் பகுதியில் பதற்றமான சூழல் நீடித்து வந்த நிலையில் இது தொடர்பாக அப் பகுதி பொதுமக்கள் சிலரால் வடமாகாண சபை உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இதனையடுத்து துன்னாலையைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்கும், வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு மிடையிலான அவசர சந்திப்பொன்று நேற்றையதினம் முதலமைச்சரின்

06

## கிளிநொச்சி யாத்திரிகர்கள் பஸ்ஸில் நசியுண்டு கதிர்காமத்தில் சாவு



கதிர்காமத் திருவிழாவுக்காக கிளிநொச்சியில் இருந்து சென்ற யாத்திரிகர்கள் இருவர் பஸ்ஸில் நசியுண்டு பரிதாபமாகப் பலியாகினர். இந்தக் கோரச் சம்பவம் இன்று அதிகாலை கதிர்காமத்தில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து கதிர்காமத் திருவிழாவுக்காகச் சென்றிருந்த சிலர்,

06

## அரசியல் கைதிகளை விடுவி!




அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான அமைப்பின் ஏற்பாட்டில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சியில் இன்று முற்பகல் 11 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (எ)

## கடற்கரைக் காற்றோடு பறந்த வாக்குறுதிகள்




கிளிநொச்சி பூநகரி பிரதேச இரணைத்தீவு மக்களின் சொந்த நிலத்துக்குச் செல்வதற்கான போராட்டம் இன்று நூறாவது நாளை எட்டியுள்ளது. 'யார்யாரோ வந்து ஏதேதோ கதைத்துச் சென்றனர். ஆனால் ஒன்றும் பிரியோசனமில்லை.' என அவர்கள் விரக்தியோடு தெரி

06

## விஜயகலாவிடம் விசாரணைக்கு சபாநாயகரிடம் அனுமதி

வித்யா கொலை வழக்குடன் தொடர்புபட்ட வாக்குமூலம் ஒன்றினைப் பெறுவதற்காக சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தவுள்ளனர். சபாநாயகரிடம் இதற்கான அனுமதி கோர குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று அனுமதியளித்துள்ளது. வித்யா வழக்கில் கைது செய்யப்பட்டிருந்த சுவிஸ்குமாரை பிடித்து வைத்திருந்த பொது மக்களிடமிருந்து அவரைக் காப்பாற்றி சிலர் கொழும்புக்கு தப்பவைத்ததாக குற்றச்சாட்டுக்கள்

06

# அரசியல் கைதிகளுக்காக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்




சிறைச்சாலைகளில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கோரியும், அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் வவுனியாவில் இன்று முற்பகல் 10.00 மணிக்கு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்தந்தை மா.சக்திவேல் தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கைதிகளான நிமலரூபன், டில்ருக்சன் ஆகியோர் சிறையில் கொல்லப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் அவர்களை நினைவு கூர்ந்து தீப்பந்தம் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் மா.தியாகராஜா மற்றும் பொது அமைப்புக்கள் கலந்துகொண்டிருந்தன. (எ)

# ஐ.தே.க. தனித்து அரசமைக்க 11 சு.க. எம்.பி.க்கள் ஆதரவு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசை அமைக்க வேண்டும் என்று கூறும் அக்கட்சியின் 11 எம்.பிக்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கத் தயாராகவுள்ளனர் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தேசிய அரசை அமைத்திருந்தன. குறித்த உடன்படிக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடியவடையுள்ள நிலையில், தேசிய அரசில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை கட்சியில் தற்போதே வலுப்பெற்றுள்ளது.

இந்த விவகாரம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் தயாசிறி, "தேசிய அரசில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் எனப் 11 பேர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கத் தயாராகவுள்ளனர். இவர்கள்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சியமைக்க வேண்டும் என்று கூறிவருகின்றனர்" என்றார். (உ-09)

# திருடனுக்கு உதவிய பொலிஸ்




கனடாவில் தமிழ்ப் பொலிஸ் அதிகாரி ஒருவரின் செயற்பாடு குறித்து அந்நாட்டு ஊடகங்கள் பாராட்டி செய்தி வெளியிட்டுள்ளன.

கனடாவில் கடை ஒன்றில் திருடச் சென்ற இளைஞர் ஒருவருக்கு டொரொன்டோவில் உள்ள தமிழ்ப் பொலிஸ் அதிகாரி ஒருவர் மறு வாழ்வு அளித்துள்ளார்.

நேர்முகத் தேர்வுக்கு செல்லும் நோக்கில் ஆடையைத் திருட ஒருவர் கடையொன்றுக்கு சென்றுள்ளார். இதனை அறிந்த பொலிஸ் அதிகாரி அந்தத் திருடனுக்கு ஆடையைக் கொள்வனவு செய்து கொடுத்துள்ளதுடன் வாழ்க்கைக்கான இரண்டாவது சந்தர்ப்பத்தையும் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் குறிப்பிட்ட தமிழ்ப் பொலிஸ் அதிகாரியான நிரன் ஜெயநேசன்,

"கனடாவிலுள்ள அங்காடியில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக எனக்கும் எனது நண்பருக்கும் ஞாயிற்றுக் கிழமை இரவு தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்துக்குச் சென்றபோது 18 வயதுடைய இளைஞர் ஆடைகள் சிலவற்றைத் திருடியிருந்தார் என்பது எனக்கு தெரியவந்தது. இளைஞனின் திருட்டின் காரணத்தை அறிந்தேன். அவனை கடைக்காரரிடமிருந்து விடுவித்து, நேர்முகத் தேர்வுக்குச் செல்ல அனுமதித்தேன்" என்றார். (உ)

# மகேஸ்வரன் கொலை வழக்கு தொடர்புபட்ட நபர் விடுதலை



முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் படுகொலை தொடர்பான தகவல்களை மூடி மறைத்த குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டு சிறைத்தண்டனை அனுபவித்த நபர், இராணுவ உளவாளிகள் இருவரைக் கொலை செய்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்களை வழங்கிய இராணுவ உளவாளிகள் இரண்டு பேரை சுட்டுக் கொல்வதற்கு உதவியதாக குற்றம் சுமத்தி தொடரப்பட்டிருந்த வழக்கிலிருந்து குறித்த நபரை, கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க விடுதலை செய்துள்ளார்.

சந்தேகநபருக்கு எதிராக சட்டமா அதிபரினால் சுமத்தப்பட்டிருந்த குற்றப் பத்திரிகை வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சந்தேக நபரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சாரங்க வெதசிங்க விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆறுமுகம் அருள் எனப்படும் திருச்செல்வம் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதேவேளை முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் படுகொலை செய்யப்பட உள்ளமை குறித்த தகவல்கள் தெரிந்தும் அது பற்றி பொலிஸாருக்கு அறிவிக்காமை குறித்த குற்றச்சாட்டை ஒப்புக் கொண்ட திருச்செல்வத்துக்கு ஓராண்டு கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# கொக்கிளாய் கடலில் 04 மீனவர்கள் கைது

கொக்கிளாய் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 4 உள்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கடல் பகுதியில் வெடிபொருட்களை (டைனமட்) பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதே அவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

அவர்கள் மீன்பிடிக்க பயன்படுத்திய படகு ஒன்றும் சட்டவிரோத 2 வலைகள் மற்றும் பிடிக்கப்பட்டுள்ள 50 கிலோ கிராம் மீன்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக முல்லைத்தீவுப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை தெரிவித்துள்ளது. (உ)

# பிணை முறி விவகாரம் சாட்சிப் பதிவுகள் நிறைவு

மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் சட்டமா அதிபர் திணைக்களத் தரப்பு சாட்சிப் பதிவுகள் நிறைவடைந்துள்ளன.

இந்த நிலையில், குறித்த பிணை முறி விநியோகத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் பெர்ப்பச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் சாட்சிப் பதிவுகள் இன்று முதல் நடைபெறவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை இடம்பெற்ற சாட்சிப் பதிவுகளில் பல்வேறு தரப்பினர்களிடமும் ஆணைக்குழு சாட்சிப் பதிவுகளை மேற்கொண்டிருந்தது. அதில் அரசாங்கத்தின் முக்கிய பிரமுகரான அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடமும் சாட்சிப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த விடயமானது தேசிய அராசங்கத்துக்குள் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (உ)

# ஐ.தே.க. காரியாலயம் மட்டக்களப்பில் திறப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி புதிதாகத் தலைமைக் காரியாலயம் ஒன்றை அமைத்துள்ளது.

திருமலை பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள அதன் திறப்புவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. புதிய தலைமைக் காரியாலயத்தை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா திறந்துவைத்தார்.

மட்டு மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் வே.மகேஸ்வரன் தலைமையில் திறப்புவிழா நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்கள் கலந்துகொண்டனர். (உ)

# தொன்மையான தாழிகள் தமிழகத்தில் கண்டறிவு

கோவை வேடப்பட்டிக் குளத்தில் தன்னார்வலர் குழுவினர் நடத்திய ஆய்வில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
கோவையைச் சேர்ந்த தமிழக மரபு சார் தன்னார்வலர்குழு ஒவ்வொரு வாரமும் வரலாற்றுத் தேடல் என்ற நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து வருகிறது. இந்தக் குழுவில் உள்ளவர்கள் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வரலாற்று ஆவணங்களை, பழங்காலப் பொருட்களைக் கண்டறிந்து ஆய்வு செய்து, அது குறித்து தொல்லியல் துறைக்குத் தகவல் கொடுத்து வருகின்றனர்.
இந்த நிலையில், பேரூர் அருகே உள்ள வேடப்பட்டிக் குளத்தில் நேற்று இந்தக் குழுவினர் நடத்திய ஆய்வில் 15 க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் மண்ணில் புதைந்திருப்பது தெரிய வந்துள்ளது.
இந்த அமைப்பைச் சேர்ந்த ஆனந்த குமார் என்பவர் கூறும் போது, 'சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்த மண்ணாலான முதுமக்கள் தாழிகள் இங்குள்ளன. 15 க்கும் அதிகமான தாழிகள் இருப்பதால், அந்த குளம் ஈமக்காடாக இருந்திருக்க வாய்ப்புள்ளது." என்றார்.
சமீபத்தில் இந்தக் குளத்தில் தூய்மைப்பணி நடைபெற்றபோது, புதரில் மறைந்திருந்த ஒரு பழங்கால மதகு கண்டறியப்பட்டது. அந்த மதகில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அது பாண்டியர் கால மதகாக இருக்கலாம் எனக் கருதப்பட்டது.
இந்த நிலையில், முதுமக்கள் தாழிகளும் அங்கு கிடைத்திருப்பதால் அந்தக் குளத்துக்கு பெரும் வரலாற்றுப் பின்னணி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (இ)

# சாம்சுங் தலைவருக்கு 12 வருடச் சிறை?




சாம்சுங் நிறுவனத் துணைத் தலைவரான லீ ஜே யுங், ஊழல் குற்றச்சாட்டில் சிக்கியுள்ளதால், அவருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்குமெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
தென்கொரியா நாட்டைச் சேர்ந்த சாம்சுங் நிறுவனத் தயாரிப்புகளான செல்போன், குளிர்ச்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி உள்ளிட்ட மின்சாதனப் பொருட்கள் உலகம் முழுவதும் பிரபலமானவை.
சாம்சுங் நிறுவனத்தின் தலைவரான லீ கூன் கீ , கடந்த 2014 ஆம் ஆண்டு மாரடைப்பால் பாதிக்கப்பட்டதால், அவரது மகனான லீ ஜே யுங் , துணைத் தலைவர் பதவியை ஏற்றார்.
துணைத் தலைவராக இருந்தாலும், கூட ஒட்டுமொத்த நிறுவனத்தையும் தனது கட்டுப்பாட்டில் அவர் கொண்டு வந்ததால் சாம்சுங் நிறுவனத்தின் தலைவராகவே கருதப்பட்டார்.
இந்த நிலையில் தனது இரண்டு சாம்சுங் நிறுவனங்களை ஒன்றாக இணைப்பதற்கு லீ ஜே யுங், சுமார் 36.4 மில்லியன் டொலர் லஞ்சம் கொடுத்தது தற்போது அம்பலமாகியுள்ளது.
துணைத் தலைவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க வேண்டும் என வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.ஒகஸ்ட் 25ஆம் திகதி அவருக்கு என்ன தண்டனை கிடைக்கும் எனத் தெரிய வரும். (இ)

# இன்னும் தடைகள் இறுகும் வடகொரியா

வடகொரியாவுக்கு எதிராக இன்னும் பல தடைகளை விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் தெரிவித்துள்ளார்.
தென்கொரியத் தலைநகர் சியோலில் செய்தியாளர்களிடம் பேசிய ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் பார்க் சு ஹூயூன் இதனைத் தெரிவித்துள்ளார்.
வடகொரியா விவகாரம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்புடன் மூன் ஜே இன் தொலைபேசியில் பேசியதாகவும், அதனையடுத்து, அவர் தெரிவித்த கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவே செய்தியாளர்களைச் சந்திப்பதாகவும் பார்க் சு ஹூயூன் தெரிவித்துள்ளார்.
வடகொரியாவுக்கு எதிராக யூகிக்க முடியாத மேலதிகத் தடைகளை விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகவும், இதற்கு சீனா மற்றும் ரஷ்யாவின் ஒப்புதலை



அந்த நாடு பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.
இந்தத் தடைகளின் மூலம் வடகொரியாவின் ஏற்றுமதி பெருமளவில் குறையும் என்றும் இதன் மூலம் பொருளாதார ரீதியில் வடகொரியா மிகப்பெரிய பின்னடைவை சந்திக்கும் என்றும் கூறப்படுகிறது. (இ)

# சுடலையிலும் மாறாட்டமா?

இறந்தவர்களின் சடலங்களை, அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட கல்லறைகளில் புதைக்காது, இடம் மாற்றிப் புதைத்த விவகாரம் பிரிட்டனில் சர்ச்சையை எழுப்பியுள்ளது.
பிரிட்டனில் தனியாருக்குச் சொந்தமான ஒரு சுடுகாடு உள்ளது. அந்தப் பகுதியில் இறப்பவர்கள் இங்குள்ள கல்லறைகளிலேயே புதைக்கப்படுவது வழக்கமாகும். புதைக்கப்பட வேண்டிய கல்லறை மற்றும் இடத்தை இறப்பவர்களின் உறவினர்கள் அல்லது இறக்க போகும் நிலையில் உள்ளவர்கள் முன்னரே தெரிவு செய்யலாம்.இதற்கு முதலிலேயே பணம் செலுத்த வேண்டும்.
இந்த நிலையில் கடந்த 2013 முதல் 2016 வரை உயிரிழந்த மூவரின் உடல் , அவர்களைப் புதைக்க விரும்பிய இடத்தில் அல்லாமல் வேறு இடத்தில் புதைக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தற்போது வெளிவந்துள்ளதை அடுத்து குறித்த தனியார் மயானத்துக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சகல உடல்களும் அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் புதைக்கப்படுகின்றனவா என்பது குறித்து ஒவ்வொரு மாதமும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனவும், இடம் மாறிப் புதைக்கப்பட்ட உடல்களை உரிய இடங்களில் உடனடியாகப் புதைக்கும் படியும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (இ)

# காப்பாற்றியது வீடியோ



பாலியல் புகாரில் கைது செய்யப்பட்ட இந்திய இளைஞர், சிசிடிவியின் உதவியால் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது.
கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் படித்துவரும் இந்திய மாணவரான அர்மான் பிரேம்ஜி (வயது- 20), தன்னை வன்புணர்வு செய்துவிட்டதாக அவருடன் கல்வி பயிலும் மாணவி வழக்குத் தொடர்ந்திருந்தார்.
லொஸ் ஏஞ்செல்ஸில் உள்ள கேளிக்கை விடுதியில் இருந்த தன்னை வலுக்கட்டாயமாக இழுத்துச்சென்ற பிரேம்ஜி, ஒய்வறையில் வைத்து தன்னைப் பாலியல் வன்புணர்வு செய்ததாக அந்தப் பெண் புகார் தெரிவித்திருந்தார்.
ஆனால் வழக்கு விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட, சிசிடிவி காட்சிகள் பிரேம்ஜிக்கு சார்பாக இருந்தன. குறித்த மாணவியே பிரேம்ஜியை பலவந்தமாகத் தன்னுடைய விடுதிக்கு அழைத்துச் சென்றமை அந்தக் காட்சிகளில் தெளிவாகத் தெரிந்தது. இதனால் பிரேம்ஜி விடுவிக்கப்பட்டார். (இ)

# சர்ச்சையில் கமரூன்

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன், கையில் சிகரெட், மதுவுடன் எதிர்க்கட்சி ஆதரவாளரான பெண் ஒருவரைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கும் புகைப்படம் இணையத்தில் பரவலாகி வருகின்றது.
2010ஆம் ஆண்டு முதல் பிரிட்டன் பிரதமராகச் செயற்பட்டு வந்த டேவிட் கமரூன், 2016ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு பிரிட்டன் வெளியேற ஆதரவாக மக்கள் வாக்களித்ததைத் தொடர்ந்து பதவி விலகினார்.
இந்த நிலையில், மத்திய இங்கிலாந்தில் தனது வீட்டுக்கு அருகே நடந்த இசை விழாவில் டேவிட் கமரூன் கலந்து கொண்டார்.
இந்த விழாவில் கலந்துகொண்ட 29 வயதான கலை ஆலோசகர் லூசி எட்வர்ட்ஸ் என்ற எதிர்க்கட்சி ஆதரவாளரான பெண், டேவிட் கமரூனைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் புகைப்படத்தை இணையத்தில் வெளியிட்டுள்ளார்.
அந்தப் புகைப்படத்தில் முன்னாள் கன்சர்வேடிவ் கட்சித் தலைவரான கமரூன், கையில் மது, சிகரெட்டுடன், தொழிற் கட்சித் தலைவர் ஜெர்மி கார்பனுக்கு





ஆதரவு அளிக்கும் வகையில் உடை அணிந்திருந்த லூசி எட்வர்ட்ஸை கட்டிப்பிடித்துக் கொண்டு புகைப்படத்துக்கு 'போஸ்' கொடுத்துள்ளார். எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவருடன், அதுவும் ஜெர்மி கார்பனின் பெயர் பொறிக்கப்பட்ட ஆடையுடன் நிற்பவருடன் கமரூன் கட்டிப் பிடித்தபடி புகைப்படம் எடுத்ததால், ஆளும் கட்சியினர் அதிருப்தி அடைந்துள்ளனர்.(இ)


# ஐ.எஸ். தீவிரவாதிக்கு சவுதியில் தண்டனை

பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்தியதாக, ஐஎஸ் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சவுதி அரேபிய நீதிமன்றம் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.
சவுதி அரேபியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், அதிகாரிகள் மற்றும் சவுதியின் வடக்கு எல்லையில் உள்ள அரார் விமான நிலையம் என்பவற்றின் மீது திட்டமிட்டு பயங்கரவாதத் தாக்குதல்களை குறித்த தீவிரவாதி நடத்தியதாக ரியாத் நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது.
சவுதியில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன் இந்த நபர்சிரியா மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் ஐ.எஸ் முகாம்களில் கலந்துகொண்டுள்ளார்.
குற்றம்சாட்டப்பட்ட ஐ.எஸ் தீவிரவாதிக்கு, 20 ஆண்டுகால பயணத் தடை விதித்தும் இந்தத்தீர்ப்பில் ஆணையிடப்பட்டுள்ளது. (இ)

# ஒன்றுபட்ட அதிமுக: எடப்பாடி நம்பிக்கை



விரைவில் ஒன்றுபட்ட அதிமுகவைப் பார்க்கலாம் என்று தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கூறியுள்ளார்.
இது தொடர்பாக சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், திமுகவைச் சேர்ந்த 250 பேர் என் முன்னிலையில்அதிமுகவில்இணைந்தனர். விரைவில்ஒன்றுபட்ட அதிமுகவைப் பார்க்கலாம்.
நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்கக் கோரி மத்திய அரசுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறோம். இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்த சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் டெல்லி சென்றுள்ளார்.
போதிய மழை இல்லாததல் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குடிதண்ணீரை வழங்கத் தேவையான நிதி ஒதுக்கி, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழகத்தில் தடுப்பணைகள் கட்ட 1,000 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்றார்.
இதேவேளை " உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக இரட்டை இலைச் சின்னத்தை மீட்கும் வகையில் அதிமுகவின் இரு அணிகளையும் இணைக்கும் முயற்சி தீவிரமாக நடந்து வருகிறது. ஆனால், எங்கள் நிபந்தனைகள் நிறைவேற்றப்படாத வரைக்கும் அதிமுகவின் பிரிந்த அணிகள் மீண்டும் இணைய வாய்ப்பில்லை" என்று அதிமுக புரட்சித் தலைவி அம்மா அணியின் நிர்வாகிகள் கூறிவருகின்றனர். இந்த நிலையில் விரைவில் ஒன்றுபட்ட அதிமுகவைப் பார்க்கலாம் என்று முதல்வர் பழனிச்சாமி கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# பெண்கள் 100 மீற்றர்: அமெரிக்க வீராங்கனை முதலிடம்

உலகத் தடகள சம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்க வீராங்கனை டோரி போவி, தங்கப்பதக்கத்தைத் தனதாக்கினார்.

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடந்துவருகிறது. நேற்று பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டம் நடைபெற்றது.

இதில் அமெரிக்க வீராங்கனை டோரி போவி 10.85 விநாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்து தங்கப் பதக்கத்தைத் தனதாக்கினார்.

இவர் போட்டியின் எல்லையை அண்மித்ததும் எல்லையைப் பாய்ந்து கடந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐவரிகோஸ்ட் வீராங்கனை மேரி ஜோசி தா லு 10.86 விநாடியில் கடந்து வெள்ளிப்பதக்கத்தையும், நெதர்லாந்து வீராங்கனை டாபைன் ஸ்சிப்பெர்ஸ் 10.96 விநாடிகளில் இலக்கைக் கடந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.(ஐ)



# கேள்விக்குறியாகிறது இலங்கைக் கிரிக்கெட்

“இலங்கைக் கிரிக்கெட் பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதனால், எதிர்காலத்தில் இலங்கையில் கிரிக்கெட்டே இருக்குமோ எனச் சந்தேகமாகவுள்ளது” என அந்த அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கா சாடியுள்ளார்.

இலங்கை, தொடர் தோல்விகளைச் சந்தித்து வரும் நிலையில் ரணதுங்கா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

“நான் கிரிக்கெட் பார்ப்பதையே நிறுத்தி விட்டேன். எப்போதாவது வேண்டுமானால் பார்ப்பேன்.நாளிதழ்களைப் படித்து அது குறித்து தெரிந்துகொள்வேன். கடைசியாக நடந்த கிரிக்கெட் நிர்வாகிகள் தேர்தல் எனக்குப் பெரிய அளவில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

“இதில் தேவையில்லாத ஆட்கள் எல்லாம் நுழையப் பார்க்கிறார்கள். இது குறித்து நான் பலமுறை பேசியும் அதை யாரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. நான் இலங்கைக் கிரிக்கெட் வீரர்களைக் குறை சொல்லவில்லை. இலங்கை கிரிக்கெட் நிர்வாகம்தான் தவறு செய்கிறது. இனியும் மௌனமாக இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் குறித்து பேசுகிறேன்” என்றார். (ஐ)

# காயத்திரிக்கு ‘பிக்பாஸ்’ ஆப்பு



பிக்பாஸ் நிகழ்ச்சியில் ஓவியா போன பின்னர் வீடு கொஞ்சம் களையிழந்துதான் காணப்படுகிறது.

இந்நிலையில், நேற்றைய நிகழ்ச்சியில் ரசிகர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான நிகழ்வொன்று அரங்கேற்றப்பட்டுள்ளது.

அதாவது, நேற்றையதினம் அடுத்து வெளியேற்றப்பட வேண்டிய நபரைத் தெரிவுசெய்வதற்காக ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்தார் ‘பிக்பாஸ்’.

அவர்களில் பலரும் வையாபுரியைத் தெரிவுசெய்தனர். அதற்கான காரணமாக அவர் வீட்டுக்குப் போகவேண்டும் என்று கூறுவதால் என்றனர்.

ஆனால் ரைசா மாத்திரமே சக்தி ஆணாதிக்க மனப்பான்மையுடன் செயற்படுகிறார். காயத்திரி கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார் என்று கூறினார்.

இதையடுத்து ‘பிக்பாஸ்’, ரைசா தவிர ஏனைய அனைவரும் சரியான காரணங்களைக் கூறவில்லை எனக் கூறி, அனைவரையும் தெரிவுசெய்து ரைசாவைத் தலைவியாக்கிவிட்டார்.

இதனால், தற்போது காயத்திரி, சக்தி இருவரின்போக்கும் மாறத்தொடங்கிவிட்டது. எனினும், வெளியே இருக்கும் ரசிகர்கள் எப்போது இவர்கள் இருவரையும் வெளியேற்றும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்திருந்தனர். தற்போது அதற்கான நேரம் வந்துவிட்டது.

இதன்படி பெரும்பாலும் காயத்திரியே வெளியே போவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

# ரஜினி, கமல் அரசியல்: பார்த்தீபன் எதிர்பார்ப்பு



“ரஜினிகாந்த், கமல்ஹாசன் ஆகிய இருவரில் யார் அரசியலுக்கு வந்தாலும் ஆதரிப்பேன். என் நீண்ட கால எதிர்பார்ப்பு நிறைவேறியதாகக் கருதுவேன்” என்று நடிகர் பார்த்தீபன் கூறியுள்ளார்.

உதயநிதி ஸ்டாலின் கதாநாயகனாக நடித்துள்ள ‘பொதுவாக எம்மனசு தங்கம்’ படத்தில், பார்த்தீபன் வில்லனாக நடித்திருக்கிறார். இந்தப் படத்துக்கான விளம்பர நிகழ்வுகளில் பங்கேற்றுவரும் அவர், நிருபர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ரஜினி, கமல் இருவருக்கும் அரசியலில் ஆதாயம் தேவையில்லை. ஆனால், விமர்சிப்பது தனி மனித உரிமை. பொது வாழ்வில், விமர்சனங்களை எதிர்கொள்ள இன்னும் தொண்டர்களாக மாறாத ரசிகர்களுக்கு சிரமமாகவே இருக்கிறது. இதனாலேயே, அவர்களின் கோபத்தை சிலர் கொச்சையாகவும், பலர் ரஜினிகாந்தை ‘நீங்களுமா?’ என்று அதிர்ந்திருக்கிறார்கள்.

அவர்களின் மென்மையான உணர்வு புரிவதால், இந்த விளக்கத்தை மனப்பூர்வமாக தெரிவிக்கிறேன். நீண்ட நாட்களாக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி வரும் அந்த நாள் விரைவில் வரவேண்டும் என ஆண்டவனை நானும் வேண்டுகிறேன்” என்றார். (ஒ)

# மீள்வாரா ?



இந்தியக் கிரிக்கெட் சபையின் சட்ட நிபுணர்களின் ஆலோசனைப் படி ஸ்ரீசாந்த் குறித்துப் பரிசீலிக்கப்படும் என இந்தியக் கிரிக்கெட் சபையின் செயல் தலைவர் சி.கே. கண்ணா தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்துக்கு இந்தியக் கிரிக்கெட் சபை விதித்த ஆயுட்கால தடையை நீக்கி கேரள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

‘தீர்ப்பு இன்று (நேற்று) தான் வந்திருக்கிறது. இந்தியக் கிரிக்கெட் சபையின் சட்ட நிபுணர்கள் குழு தீர்ப்பைப் படித்தபின்னர் தங்களது ஆலோசனையைத் தெரிவிப்பார்கள். அதனை பொதுக்குழுவில் வைத்து விவாதித்து உரிய முடிவு எடுக்கப்படும்’ என்றார்.

இதுகுறித்து கேரள மாநில கிரிக்கெட் சங்க செயலாளர் ஜெயேஷ் ஜோர்ஜ் அளித்த பேட்டியில்,

“ஸ்ரீசாந்துக்கு பிரச்சினை ஏற்பட்ட முதல் நாளிலிருந்தே நாங்கள் அவருக்கு ஆதரவளித்து வருகிறோம். அவர் நிறைய அவமானங்களைச் சந்தித்து விட்டார். தற்போது கேரள நீதிமன்றம் மகிழ்ச்சியான தீர்ப்பை அளித்துள்ளது. தற்போது அவர் சகஜ வாழ்க்கைக்குத் திரும்புவார் என்று நம்புகிறோம்.

“மீண்டும் ஸ்ரீசாந்த் கேரள அணிக்காக விளையாடுவதைப் பார்க்க விரும்புகிறோம். ஏற்கனவே, டில்லி நீதிமன்றம் ஸ்ரீசாந்தை விடுதலை செய்தபோதும் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு அவர் மீதான தடையை நீக்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபையிடம் நாங்கள் வேண்டுகோள் விடுத்தோம். ஆனால் இந்திய கிரிக்கெட் சபை ஆயுட்கால தடை முடிவில் பிடிவாதமாக இருந்தது” என்றார். (ஐ)

# கலைமதியை வீழ்த்தி சம்பியனானது வலைப்பாடு

புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகம் நடத்திவந்த உதைபந்தாட்டத் தொடரின் சம்பியனாக வலைப்பாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்று மாலை 5 மணியளவில் நசரேத் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பித்த இந்த இறுதியாட்டத்தில், நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வலைப்பாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த வலைப்பாடு சென். அன்ரனிஸ் அணி, ஆட்ட நேர முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்து சம்பியன்பட்டத்தைத் தனதாக்கிக்கொண்டது. (ஐ)

# கரப்பந்தாட்டத்துக்கு விண்ணப்பம் கோரல்

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, அமரர் நல்லையா சதீஸ் குமார் ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்படவுள்ள கரப்பந்தாட்டத் தொடருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிகள் ‘ஏ’, ‘பி’ என இரு பிரிவுகளில் அல்லாமல் ஒரே பிரிவில் மாத்திரம் நடைபெறவுள்ளன.

இத்தொடரில் பங்கேற்க விரும்பும் கழகங்கள் 10.08.2017 இற்கு முன்னர், நேரடியாகவோ அல்லது 0776176988 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாகத் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## கேரளக் கஞ்சாவுடன் நால்வர் கைது




இருவேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புச் சோதனை நடவடிக்கையின் போது கேரளக் கஞ்சா வைத்திருந்த நால்வரை ஹட்டன் மது வரித் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர். நேற்று மாலை டிக்கோயா நகரப் பகுதியில் விற்பனை செய்யப்பட நிலையில், ஒரு தொகை கேரளக் கஞ்சாவுடன் ஒருவரும் திம்புள்ள பிரதேசத்தில் வெயாகொட பகுதியிலிருந்து நுவரெலியா சென்ற வான் ஒன்றிலிருந்து பாவனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை கேரளக் கஞ்சாவுடன் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சுற்றிவளைப்பின் போது 75,000 மில்லி கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதாகவும் கைது செய்யப்பட்ட நால்வரும் இன்று ஹட்டன் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் ஹட்டன் மதுவரித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ)

## காருக்குள் மூச்சடக்கி சிறுவன் மரணம்

அம்பாறை, ஒலுவில் பிரதேசத்தில், காருக்குள் ஐந்தரை வயதுச் சிறுவன் அடைபட்டு மூச்சுத்திணறி, உயிரிழந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.
ஒலுவில் 6 ஆம் பிரிவைச் சேர்ந்த முஹம்மது லாபீர் முஹம்மது இன்ஸாப் என்ற சிறுவனே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சிறுவன்,நேற்று மாலை 5 மணியளவில் தனது வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரைத் திறந்து உள்ளே சென்று, காரின் கதவுகளை பூட்டிக் கொண்டுள்ளார். இந்த நிலையில், சிறுவனை காணவில்லையென பெற்றோர் தேடிவந்த நிலையில், காரின் உரிமையாளர் காரைத் திறந்து பார்த்த போது, சிறுவன் உயிரிழந்த விடயம் தெரியவந்துள்ளது. சிறுவனால் காரின் கதவுகளைத் திறக்க முடியாததால், மூச்சுத் திணறல் ஏற்பட்டு, காருக்குள்ளேயே, சிறுவன் உயிரிழந்துள்ளாரெனப் பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. (உ)

# நீர் வழங்கல் திட்டம் 4ஆம் கட்டம் ஆரம்பம்

மாத்தறை நீர் வழங்கல் திட்டத்தின் 4ஆம் கட்ட செயற்றிட்டத்துக்கான ஆரம்பப் பணிகள், நிகழ்வில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நேற்று ஆரம்பித்துவைத்தார்.
இத்திட்டத்தினால் நாளொன்றுக்கு 60,000 கனமீற்றர் நீர் வழங்குவதன் மூலம் மாத்தறை, திஹகொட தெவிநுவர, திக்வெல்ல, வெலிகம, வெலிபிட்டிய, மாலிம்பட, கம்புருபிட்டிய, கிரிந்த, அதுரலிய, பெலியத்த, தங்கல்லை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 284,808 பேர் நன்மையடையவுள்ளனர்.
18,208 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இத்திட்டம் இன்னும் 3 வருடங்களில் நிறைவுபெறும். (உ)



# இன்றைய கருத்தோவியம்




## நுவரேலியாவில் விளையாட்டு பயிற்சிக் கூடம்

நுவரெலியாவில் உயர் தரத் தொழில்நுட்பத்துடன் கூடிய விளையாட்டுப்பயிற்சிக்கூடக் கட்டடத்தொகுதி ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இரண்டு உள்ளக விளையாட்டரங்குகள், உடற் பயிற்சி மத்திய நிலையம்,நவீன வசதிகளுடனான உள்ளக நீச்சல் தடாகம், மீண்டும் கழற்றி பொருத்தக் கூடிய விளையாட்டரங்கு வசதி, விரிவுரை அறை, களஞ்சிய வசதி, வைத்திய மத்திய நிலையங்கள், 200 வீரர்களுக்கு ஒரே தடவையில் தங்கியிருப்பதற்கான தங்குமிட வசதி மற்றும் தொடர் மாடி வீடுகளும் இதில் அமையவுள்ளன.
மெய்வல்லுநர், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கிரிக்கெட், கால்பந்து, ஜிம்னாஸ்டிக், கைப்பந்து, ஹொக்கி, வலைப்பந்தாட்டம், றக்பி, நீச்சல், டென்னிஸ், பெட்மிண்டன் உள்ளிட்ட 14 விளையாட்டுகளுக்கான வசதிகளைக் கொண்டதாக இந்த விளையாட்டு பயிற்சிக் கூடம் அமையவுள்ளன. இதற்கான ஒப்பந்தம் விளையாட்டுத்துறை அமைச்சுக்கும், பிரான்ஸ் நாட்டின்எலைட்ஸ்புறஜெக்ட் எஸ்.ஏ.எஸ் நிறுவனத்துக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சுமார் 13 மில்லியன் ரூபா செலவில் இப்புதிய திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. (உ)

## குத்தகைக்கு மத்தல




மத்தல விமான நிலையத்தை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக இந்திய முதலீட்டாளர் ஒருவருடன் இலங்கை அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாக,இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக அபயசிங்க தெரிவித்துள்ளார். மத்தல விமான நிலையத்தை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக இந்திய முதலீட்டாளருடன் பேச்சுக்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன.
மத்தல விமான நிலையத்துக்கு மாதம் ஒன்றுக்கு 250 மில்லியன் ரூபா செலவு ஏற்படுகிறது. ஆனால் வெறும் 4 மில்லியன் ரூபா மாத்திரமே வருமானம் கிடைக்கிறது.
நாளொன்றுக்கு மூன்று விமானங்கள் மாத்திரமே, இங்கு வருகின்றன.
இதனால், ஆண்டுக்கு 360 மில்லியன் ரூபாவை அரசாங்கம், சீனாவிடம் பெறப்பட்ட கடனுக்காகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## காசோலைகள் வழங்கல்



மாத்தறை மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பாடசாலைகள், விகாரைகள், பள்ளிவாசல்கள் போன்றவற்றுக்கு மலசலகூடம் அமைப்பதற்கான காசோலைகள் மற்றும் நீர்த் தாங்கிகள் வழங்கப்பட்டன.
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரான ரவூப் ஹக்கீமினால் இந்தக் காசோலைகள் வழங்கப்பட்டன. (உ)

## வீட்டில் படுத்துக்கொண்டு முகநூலில் புரட்சி செய்கிறார்கள்



கருத்துக்களும் விமர்சனங்களும் கண்டனங்களும் என எல்லாமே முகநூல் மயமாகிவிட்டன. வீட்டில் படுத்துக் கொண்டே புரட்சிகளும் கூட செய்கிறார்கள் என தொழிலாளர் தேசிய முன்னணியின் செயலாளர் நாயகமும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.திலகராஜ் தெரிவித்துள்ளார்.
மலையகத்தில் நடைபெற்ற எறிபந்து விளையாட்டு நிகழ்வில் உரையாற்றிய அவர், "இன்றைய உலகம் தகவல் தொழில்நுட்ப யுகத்தின் உச்சத்தில் உள்ளது. பெரியோர் பேஸ்புக் எனப்படும் சமூக வலைத்தளத்தில் முழுமையாக உள்வாங்கப்பட்டவர்களாகி வருகின்றனர். இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் விளையாட்டுத் துறையில் சிறுவர்களின் ஈடுபாடு மிகவும் குறைவாகவே இருக்கின்றது.
கணணியிலும், கைத்தொலைபேசியிலும், வீடியோ விளையாட்டுக்களிலும் உட்கார்ந்த இடத்திலேயே அவர்கள் பொழுதைக் கழிப்பதனால் உற்சாகம் குறைந்தவர்களாகும் அபாயம் உள்ளது. எனவே, அவர்களை மைதானத்தில் விளையாடுவதை ஊக்குவிக்க வேண்டியவர்களாக உள்ளோம் - என்றார். (உ)

## நாளை நாளும் கோளும்

09.08.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 24ஆம் நாள்
துதியை பி.இ 12.54 வரை | சதயம் முழுவதும் | சித்தயோகம்
இராகுகாலம் 12.04-01.34 | சுபநேரம் 04.34-06.04 | எமகண்டம் 07.34-09.04

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிரயாணம் | இன்பம் | விவேகம் | ஜெயம் | பயம் | சுகம் | ஆதாயம் | குழப்பம் | நட்டம் | உற்சாகம் | ஆர்வம் | ஜெயம் |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



**1992 .08.08**

யாழ்ப்பாணம், அராலித்துறையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இலங்கை இராணுவத்தின் வட பிராந்தியத் தளபதி டென்சில் கொப்பேக்கடுவ கொல்லப்பட்டார்.

# வரணியில் 83 பவுண் கொள்ளை

தென்மராட்சி – வரணிப் பகுதியில் 83 பவுண் தங்க நகைகள் கொள்ளையர்களால் சூறையாடப்பட்டன.

இன்று அதிகாலை ஒரு மணியளவில் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் உள் நுழைந்த 5,6 பேர் கொண்ட கொள்ளைக்கும்பல் ஒன்று அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி நகைகளைக் கொள்ளையடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஆ)

## வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு

இலங்கை - இந்திய வெளியுறவு இராஜாங்க அமைச்சர்கள் பிலிப்பைன்ஸில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

மணிலாவில் நடைபெறும் ஆசிய அமைச்சர் மட்ட மாநாட்டுக்குச் சென்றபோதே இந்தச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது. இலங்கையின் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க, இந்திய வெளியுறவு இராஜாங்க அமைச்சர் விஜய்குமார் சிங் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.

குறிப்பாக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உயர்மட்ட அரசியல் பயணங்கள் மற்றும் உடன்படிக்கைகள் குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(உ)

## தொலைபேசி திருட்டு சிப்பாய் கைது



யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கீழ் கடமையாற்றும் இராணுவ சிப்பாயொருவர், கையடக்கத் தொலைபேசி திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வல்லவ பகுதியைச் சேர்ந்த, மல்லவத்தகே றொசான் நிலாந்த (வயது 27) என்ற இராணுவ சிப்பாயே 38,500 ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த இராணுவச் சிப்பாய் நேற்று இரவு கொழும்பில் இருந்து யாழ். நோக்கிச் சென்ற ரயிலில் பயணித்த பெண் ஒருவரின் கைப்பையில் இருந்த 38,500 பெறுமதியான கையடக்கத் தொலைபேசி மற்றும் 700 ரூபா பணத்தினையும் திருடியுள்ளார்.

குறித்த சிப்பாய் திருடியதைக் கண்ட பெண் பயணி ரயில் பொலிஸாருக்கு இந்த விடயம் தொடர்பில் தகவல் வழங்கியுள்ளார். இந்தத் தகவலின் பிரகாரம் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (உ)

## தமிழக மீனவர்கள் 53 பேர் கைது

இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த புதுக்கோட்டை மீனவர்கள் 53 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளதாகத் தமிழகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் குறிப்பிட்டுள்ள புதுக்கோட்டை மீனவர்கள், “ நாங்கள் மீன்பிடியில் ஈடுபட்டிந்த பகுதிக்கு நேற்று நள்ளிரவு வந்த இலங்கை கடற்படையினர் அந்தப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த 10க்கும் மேற்பட்ட படகுகளைச் சுற்றி வளைத்து சுமார் 44 மீனவர்களை கைது செய்து காங்கேசன்துறைக்கு கொண்டுசென்றுள்ளனர்.

இதேவேளை ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த மீனவர்கள் 9 பேரையும் சிறைப் பிடித்துள்ளனர்” - என்றனர். (உ)

# கிழக்கின் சமரில் சிவானந்தா வெற்றி



கிழக்கின் சமர் எனப்படும் மட்டக்களப்பு சிவானந்தா தேசியப் பாடசாலையின் அணிக்கும், அக்கரைப்பற்று இராம கிருஸ்ண மிஷன் தேசியப் பாடசாலை அணிக்கும் இடையிலான உதைபந்தாட்ட போட்டி நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு சிவானந்தா தேசியப் பாடசாலையின் அதிபர் எஸ்.தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த உதைபந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு சிவானந்தா தேசியப் பாடசாலை அணி வெற்றி பெற்று இந்த ஆண்டுக்கான சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (உ)

### கடற்கரைக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளனர். அமைச்சர்கள், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், அதிகாரிகள் என அனைவரினதும் வாக்குறுதிகள், காலக்கெடுக்கள் கடற்காற்றோடு பறந்து விட்டதாக அம் மக்கள் குறிப்பிட்டுள்ளனர். இதுவரை காலமும் கடற்கரையில் இடம்பெற்று வந்த போராட்டம் இனி அருகில் உள்ள தேவாலயத்தில் இடம்பெறும். மழைக்காலம் என்பதனால் போராட்ட இடத்தை மாற்றியிருகின்றோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தங்களது பூர்வீக இடத்தில் மீளக் குடியேற வேண்டும் என வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து இன்று நூறு நாட்கள் கடந்ததை முன்னிட்டு இரணை மாதாநகரில் அமைந்துள்ள தேவாலயத்தில் விசேட பூசை வழிபாடுகளையும் அம் மக்கள் மேற்கொண்டனர். (உ)

### பஸ்ஸில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் இருந்த மைதானம் ஒன்றில் இரவு உறங்கினர். இந்த நிலையில் இன்று அதிகாலை பஸ் ஒன்று பின்னோக்கிச் செலுத்தப்பட்டபோது, சாரதியின் கவனயீனத்தால் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது அந்த பஸ் ஏறியது. இதனால் அங்கு உறங்கிக் கொண்டிருந்த மூவர் படுகாயமடைந்தனர். காயமடைந்த மூவரும் உடனடியாகக் கதிர்காம வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். எனினும் பாரதிபுரத்தைச் சேர்ந்த சி.ஐங்கரன் (வயது-41) என்பவரும் 18 வயதான இளைஞரும் உயிரிழந்தனர். காயமடைந்த மற்றையவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ)

### விஜயகலாவிடம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமத்தப்பட்டுள்ளன. சுவிஸ்குமாரை பொதுமக்கள் கட்டிவைத்திருந்தபோது, சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அவ்விடத்தில் நின்றதாகக் கூறப்படும் காணொளி ஆவணம் அண்மையில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவ்விடயம் குறித்தே அமைச்சர் விஜயகலா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது. சுவிஸ் குமார் தப்பிச்செல்ல உதவியதாகக் கூறப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரி லலித் ஜயசிங்க மீதான வழக்கு இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்றபோதே சபாநாயகரிடம் அனுமதி கோருவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது(எ-01)

### பறிபோகின்றது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பப்படுகின்றது. வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பிலான விவாதத்தை எப்போது நடத்துவது என்பது குறித்து இன்று தீர்மானிக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சராக, திலக் மாரப்பன விரைவில் நியமிக்கப்படுவார் என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றை மேற்கோள்காட்டி தகவல் வெளியிடப்பட்டுள்ளது. திலக் மாரப்பன தற்போது அபிவிருத்தி பணிகள் தொடர்பான அமைச்சராக பதவியில் இருக்கிறார். எனினும், நல்லாட்சி அரசாங்கத்தின் ஆரம்பத்தில் இவர் சட்டம் ஒழுங்கு அமைச்சராக இருந்து, பின்னர் பதவி விலகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

### பதற்றம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றிருந்தது.அதன்போது பொலிஸ்மா அதிபருடன் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்ட வட மாகாண முதலமைச்சர் துன்னாலையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டு வருமாறு கோரினார்.

நேற்றைய தினம் குறித்த பகுதியிலிருந்து விசேட அதிரடிப்படையினர் வாபஸ் பெறப்பட்டுள்ள நிலையில் இன்றைய தினம் துன்னாலையில் அமைதி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

### கட்சித்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது. அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் உள்ளிட்ட சில முக்கிய விடயங்கள் குறித்து இன்றைய தினம் கலந்துரையாடப்படவுள்ளது. (எ)

### பொலிஸ்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் வாகனம் ஒன்றும், வான் ஒன்றும், லொறி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மானிப்பாய், கோப்பாய் உள்ளிட்ட பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறு சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தில் நிலவிய சூழ்நிலையை கருத்திற்கொண்டே சுற்றி வளைப்பு தேடுதல் நடத்தப்பட்டுள்ளன எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

## பஸ் விபத்து

### ஒருவர் பலி; 11 பேர் காயம்

அரணாயக - உஸ்ஸாபிடிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, மேலும் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

இன்று காலை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை மீறி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது காயமடைந்த 12 பேர் மாவனெல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். (உ)

## மின்னல் தாக்கி விவசாயி மரணம்

தெற்கில் மழையுடன் கூடிய காலநிலை நீடித்துவரும் நிலையில் மஹஓய - டெம்பிடிய பகுதியில் மின்னல் தாக்கி 49 வயதுடைய விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வயல் காணியொன்றில் பணியாற்றிக்கொண்டிருந்தபோதே இன்று இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (உ)

## ஜெனரேட்டர் தேவை

அலுவலக கணினிகளுக்கு ஏற்றவகையில் மின்சாரம் பெறக்கூடிய, 4000 – 5000 வாட்ஸ் வலுவுடைய, பாவித்த சிறிய ரக ஜெனரேட்டர் ஒன்று தேவை.



தொடர்புகளுக்கு
077 657 5907

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 08.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.